Regd. No. M. 4078

ஸ்ரீ:

ஸ்ரீ தந்வந்தரயே நம:

# வைத்ய சந்த்ரிகா

தமிழ் நாடு ஆயுர்வேத மஹா மண்டலத்தின்
ஆதரவில் நடந்துவரும் பத்ரிகை.

Vol. 8 | September, 1946 | No. 7

ஆசிரியர் ;

V. B. நடராஜ சாஸ்த்ரி, ஆயுர்வேதாசார்ய.
வைத்ய விசாரத, வைத்யவாசஸ்பதி.

ப்ரகாசகர் : பண்டித ஸ்ரீ. மெ. ஸுந்தரராஜாசார்யர்.

விஷயங்கள்.


| | | |
|---|---|---|
| ப்ரவாஹிகை | ஸ்ரீ என், வெங்கடேச சர்மா. | 1 |
| வாசகர்களுக்கு விஜ்ஞாபனம் | பத்ராதிபர் | 12 |
| விசேஷக்குறிப்புகள் | | 13 |
| ஆயுர்வேதாபிவிருத்தி | | 15 |
| கட்டுரைப் போட்டிகள் | | 17 |


வருஷச்சந்தா ரூ. 3—0—0

# குறிப்பு

வைத்ய சந்த்ரிகையில் பிரசுரம் செய்ய வேண்டிய விஷயங்கள், கட்டுரைகள் முதலிய அநுப்ப வேண்டிய விலாஸம் :—

ஆசிரியர், வைத்ய சந்த்ரிகா,

ஆத்ரேய ஆயுர்வேதிக் ஒர்க்ஸ்,

தென்னூர் ரோடு, திருச்சிநுப்பள்ளி.

வைத்ய சந்த்ரிகையின் சந்தா, விளம்பர விகிதங்கள் மற்றும் தமிழ் நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் ஸகல விஷயங்களையும் குறித்து எழுத வேண்டிய விலாஸம் :—

வைத்ய வாசஸ்பதி பண்டிட் P. S. ராமசர்மா,

பொதுக் கார்யதர்சி,

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்,

கரூர். (திருச்சி ஜில்லா)

ஸ்ரீ:

# "ப்ரவாஹிகா ரோகமும் - - - - - - அதன் சிகித்ஸையும்"

(ஸ்ரீ. என். வெங்கடேச சர்மா, ஆயுர்வேதசிரோமணி, திருச்சி.)

---

சென்ற இதழில் அதிஸாரம் என்ற வியாதியையும் அதன் சிகித்ஸையையும் ஆராய்ந்தோம். இனி. இவ்வித ழில் அதிஸாரத்துக்கு அடுத்தபடி கோரரூபமுள்ள வியாதி யான 'ப்ரவாஹிகை' என்பதைப் பற்றி ஆராய்வோம். இது ஸர்வஸாதாரணமாக யாவரும் அறிந்த வியாதியா கும். ரக்தக் கசிவு கலந்த கோழை போன்ற சீதமென்னும் தோஷாம்சம் அடிக்கடி வயிற்றுவலியோடும் ஆஸனக்கடு ப்புடனும் வெளியாகும் ஓர் வித பேதியையே "ப்ரவாஹி கை" 'சீதபேதி' அல்லது 'வயிற்றுக்கடுப்பு' என வழங் கப்படுகிறது. ப்ரவஹணமென்ருல் மலம் போவதற்காக ஏற்படும் ஓர்வித இயக்கம். அவ்வித இயக்கம் தோன்று வதால் 'ப்ரவாஹிகை' எனப் பெயர் வந்ததாகக் கூறலாம். அதிஸாரத்திற்கும் ப்ரவாஹிகைக்கும் பேதம் யாதெனில்:- அதிஸாரத்தில் அதிக அளவுடன் மலபேதி ஏற்படும். ப்ர வாஹிகையில் மலம் மிகக் கொஞ்சமாகவோ அல்லது மல மில்லாமலோ சீதம் அல்லது ரக்தம் கலந்து பேதியாகும். சில ஸமயம் கோழை சூழ்ந்து ஆட்டுப் புழுக்கை போன்று கட்டி கட்டியாக சிறிது மலம் வெளியாகும். அதிஸாரத் தில் இதற்கு முற்றிலும் மாருக மலம் உடைந்து தளர்ச்சி யாயும் அதிக அளவிலும் பேதியாகும், சீதபேதியில் ஆஸ னத்தில் கடுப்பு வலியுடன் வெகுநேரம் சிரமப்பட்டு வெளி யாகும். அதிஸாரத்தில் ஆஸனத்தில் எவ்வித உணர்ச்சி யுமின்றி வெகு சீக்கிரமாக பேதியாகிவிடும். இச் சீதபேதி ரோகமானது பலருக்குப் பலவிதமாக ஏற்பட்டு வருகிறது. இதனுலேயே இதைப் பற்றி முற்காலத்திய ஆசிரியர்களும்

ஹேது லக்ஷணாதி நிர்ணய விஷயத்தில் பலவித அபிப்பிராயங்கள் கூறியிருக்கின்றனர். இதனால் இதன் பெயரும் ப்ரவாஹிகை என்று மட்டுமில்லாமல் இன்னும் பலவிதப் பெயர்களால் வழங்கப் பட்டு வந்ததாகத் தெரிகிறது. போஜன் என்ற வைத்ய ஆசிரியர் "விஸ்ரம்ஸீ" என்றும், பராசரர் என்ற ஆசிரியர் "அந்தர்க்ரந்தி" என்றும், ஹாரீதர் என்பவர் "நிஸ்ஸாரகம்" என்றும் பெயரிட்டு வழங்கியதாகத் தெரிகிறது. அஸாத்ம்யமாயும் அஹிதமாயுமுள்ள ஆகாராதிகளால் வாயுவானது பிரகோபமடைந்து நாளடைவில் சேர்ந்த பலாஸமென்னும் கபத்தை கொஞ்சம் கொஞ்சமாக அடிக்கடி மலத்துடன் கலந்து கீழ் நோக்கித் தள்ளுகிறது. இதுவே ப்ரவாஹிகையின் சுருக்கமான லக்ஷணம் என்று மாதவகரர். இது வாத, பித்த, கப தோஷத்தினால் மூன்று, ரக்தத்தினால் ஒன்று என நான்கு விதமாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது. இதில் வாதாதிகமான ப்ரவாஹிகையில் வலி விசேஷமாயிருக்கும். பித்தஜப்ரவாஹிகையில் எரிச்சலதிகமாயிருக்கும். கபஜப்ரவாஹிகையில் சளிபோன்ற கபமதிகமாயிருக்கும். ரக்தஜமான ப்ரமாஹிகையில் ரக்தம் விசேஷமாய்க் கலந்திருக்கும். ஸ்னேஹாதிகத்தினால் கபஜ ப்ரவாஹிகையும், ரூக்ஷாதிக்யத்தினால் வாதஜ ப்ரவாஹிகையும், தீக்ஷ்ண உஷ்ணாதிக்யத்தினால் ரக்தஜ பித்தஜ பிரவாஹிகையும் உண்டாவதாகவும் கூறப்பட்டிருக்கிறது. இதில் அநுபவத்தில் முக்கியமாய் ஸ்தூலாந்த்ரமென்னும் பெருங்குடலின் ஆவரணபூதமான ஜவ்வு போன்ற பாகத்தில் அழலை ஏற்பட்டு விடுவதாகத் தெரிகிறது. குளிர்காற்று அல்லது மழைச் சாரலில் உடம்பைத் திறந்து படுத்துறங்குவது அல்லது உட்கார்ந்திருப்பது, கடுமையான குளிர் பிரதேசங்களில் சென்று வாஸம் செய்வது, கடும் வெய்யிலில் அலைந்து திரிந்து விட்டு உடனே சீத ஜலத்தில் ஸ்நானபானம் செய்வது, அஸாத்ம்யமாயும், அஜீர்ணகரமாயும், அதிக உஷ்ணம் காரமுள்ளதுமான ஆகாராதிகளையும், அவ்வித காபி, டீ முதலிய பானங்களையும் உபயோகிப்பது, விஷமஜ்வரம், சன்னிபாதஜ்வரம், அதிசாரம், மசூரிகை முதலிய வியாதிகளால் அதிகமாய் பாதிக்கப்பட்டநிலைமை

முதலியன இவ்வியாதியை முக்கியமாய் தூண்டும் ஹேதுக்க ளாகக் கருதப்படுகிறது. பொதுவாக உஷ்ணதிக்யமுள்ள காலங்களிலும், உஷ்ணதிக்யம் ஏற்பட்ட சரீரத்திலும், சீத உஷ்ணங்கள் அடிக்கடி மாறுபடும் காலங்களிலும், மாறி மாறி உஷ்ண சீத ப்ரதேசங்களில் வசிக்க நேரிடுகை யிலும் இவ்வியாதி விசேஷமாய் பாதிப்பது வழக்கம். ஆகவே அதிக உஷ்ணமும், உஷ்ண சீதங்களின் திடீரென மாறுபாடுகளும் இவ்வியாதியை உத்பத்தி செய்யும் சாத னங்களாகக் கருதலாம். நாள்பட்ட பிரவாஹிகை சில பேருக்கு மூலரோகத்துடன் சம்பந்தப்பட்டிருப்பதுண்டு. அல்லது மூலகாரணமாகவும் ஏற்படுவதுண்டு. இவ்வியா தியில் ஒருவகை contagious சாங்க்ராமிகமாகவுமிருப்பதாக மேனாட்டு வைத்யர்கள் கருதுகின்றனர். இவ்வியாதியின் **ஆரம்பாவஸ்தையில்** ஏதோ வயிற்றில் ஓர்வித கோளாறு டன் தோன்றி வயிற்றை பிசைந்து திருகுவது போன்றும், பிடுங்குவது போன்றும் வலி வேதனை உண்டாகி பின் கடுப்பும் எரிச்சலும் வரவர விருத்தியாகி விடுகிறது. முத லில் நாபிபக்கம் சங்கடம் தெரியும். உடனே வெளிக்கு வருவதுபோன்ற தோற்றம் உண்டாகி, கொஞ்சம் மலம் சீதம் வெளியானதும் கொஞ்சநேரம் கடுப்பு, வலி, வேதனை யாவும் தணிந்தது போன்று தோன்றி பிறகு வேதனைகள் யாவும் முன்போலவே ஆரம்பித்து மலப்ரவ்ருத்திக்கு உணர்ச்சி ஏற்படுகிறது. போய் உட்கார்ந்தால் மலமும் சீதக்கட்டு ரத்தம் கலந்த சளிபோன்ற வஸ்து மறுபடி வெளிவர ஆரம்பிக்கும். இவ்விதமாக அடிக்கொரு தடவை ஏற்பட்டுக்கொண்டு சஹிக்கவொண்ணாத தொந் தரவளிப்பது வழக்கம். சிற்சில சமயங்களில் மாம்ஸ கண் டங்கள் போன்ற வஸ்துவும் கலந்து வெளிவருவதுண்டு. சிலருக்கு இவ்வியாதியில் மூத்திரப்பை (kidney) தாக்கப் படுவதுண்டு. அங்கிலையில் சிறுநீர் சரிவர இரங்குவதில்லை. கால், கை, வயிற்றினடிபாகம் இவற்றில் பூசினாற்போல் சுரப்பு தோன்றும். சிலசமயம் சிறிது நீர் எரிச்சல் கடுப்பு வலியுடன் இறங்குவதுண்டு.

பொதுவாக இவ்வியாதியை கவனிக்காமல் அலக்ஷ்ய

மாயிருந்து முற்றவிட்டால் சரீரம் ரொம்பவும் க்ருசமாகும். வர வர பலஹீனம் அதிகம் தோன்றும். ஜ்வரம் பிரதி தினம் காய ஆரம்பிக்கும். கல்லீரல், மண்ணீரல் (Liver and Spleen) வீங்க ஆரம்பித்துவிடும். விக்கல், வாந்தி, கடுமையான ஜ்வரம், நாவரட்சி, கால் கை வயிறு இவற்றில் வீக்கம், சோகை, பாண்டு, மயக்கம், தலைசுற்றல், தனக்குத் தெரியாமலே மூத்ர மல விஸர்ஜனம், நாடி நடை படபடத்து வீழ்ச்சியடைந்து நின்றுவிடக்கூடிய ஸ்திதி இது முதலியன இவ்வியாதிக்கு உபத்ரவங்களாக (complications) கருதப்படவேண்டியவையாகும். மேற்கூறிய சகல உபத்ரவங்களும் சம்பூர்ணமாக ஏற்படுமேயாகில் நிச்சயமாய் இந்நோயாளி மரித்துவிடுவான் என கூறிவிடலாம். ஆகையால் இவ்வியாதி முற்றுவதற்கு முன்பே தகுந்த பராமரிப்பும் சிகித்சையும் செய்தால்தான் குணமடைவதற்கனுகூலமான சுகசாத்ய நிலைமை ஏற்படும். இதில் ஆம, பக்வ லக்ஷணங்கள் முன் அதிசாரத்தில் கூறியவை போன்றே என அறியவும்.

இனி ப்ரக்ருதமான இவ்வியாதியில் மேனாட்டு வைத்யர்களின் கொள்கையை கொஞ்சம் ஆராய்வோம். இது இருவகையாக காண்கிறதென்றும் ஒன்று Bacillary dysentery என்றும் மற்றொன்று Amoebic dysentery என்றும் கூறப்படுகிறது. பொதுவாக இவை பரவும் குணமுள்ளதென்றும், இவ்வியாதியஸ்தனுடைய மலத்தில் ஸ்பர்சித்த ஈ, எறும்பு முதலியன இதர ஆகார வஸ்துக்களையும் ஸ்பர்சிக்கவே அதை புஜிக்கும் இதர மனிதனுக்கும் இவ்வியாதி உண்டாகிறதாம். Bacillary Dysentery யானது நுண்ணிய ஜீவாணுக்களால் உண்டாகிறதென்றும் இது வெகு கடுமையான வியாதியென்றும் இவ்வணுக்கள் காற்றின்மூலமாகக்கூட ஒருவருக்கொருவர் பரவுமென்றும் இது பெரும்பாலும் அசாத்யமாய் Fatal முடிகிறதென்றும் கூறுகின்றனர். இதில் ஆரம்பாவஸ்தையிலேயே நன்கு வியாதி நிர்த்தாரணம் செய்து "Anti Dysenteric Serum" இஞ்செக்ஷன் செய்தால் குணமாகிவிடுகிறதாகக் கூறுகின்றனர். மற்றொரு வகையான Amoebic Dysenteryயில்

Emetune என்னும் இஞ்செக்ஷனுல் குணமாகிறதாகவும், பொதுவாக இவ்வியாதியஸ்தனை வெகு ஜாக்கிரதையாக பராமரித்துக் காப்பது Nursing விசேஷ குணமளிப்பதாக வும் அவர்களின் கொள்கை மிகவும் சமீபத்திய நவீன ஆராய்ச்சியின்படி Penicillin (பென்ஸிலின்)என்ற ஓர்வித மருந்தின் இஞ்செக்ஷன் முறையானது கடுமையான நிலை மையில் கூட குணப்படுத்துமியல்புடையதாக வெகுவாக அம்முறையை அப்யஸிக்கும் டாக்டர்களால் புகழப்படு கிறது. இம்மருந்தானது அநேக வியாதியின் ஜீவாணுக் களையும் கொன்று வியாதியஸ்தனை இயற்கை நிலைமைக்கு கொண்டுவைக்கும் சர்வ சஞ்சீவியென்பது அவர்களின் கொள்கை. இதில் எவ்வளவு தூரம் உண்மையிருக்கிற தென்பது யோசிக்கக்கூடிய விஷயம். இனி நம் ஆயுர் வேத சாஸ்திரீய முறைப்படியும், நம் அனுபவத்தில் பிரத் யக்ஷமாய் பலனளிப்பதுமான சிகித்ஸா முறைகளை சுருக்க மாய்க் கூறுவோம்.

## சிகித்ஸை.

இவ்வியாதியின் ஆரம்பாவஸ்தையில் 2 டீ ஸ்பூனளவு ஆமணக்கெண்ணெயும் 2 அவுன்ஸ் காய்ச்சின பசும்பாலும் ஒன்ருய்க்கலந்து குலுக்கிக் கொடுப்பது வழக்கம். இதனுல் இரண்டு மூன்று தடவை வழித்தாற்போல் மலமும் வெளி யாகிச் சிக்கலும் நீங்கி விடும். பிறகு ஜாதீபலாதி சூர்ணம் 5 முதல் 10 அரிசி எடை வரை நெய்யில் குழைத்துக் கொ டுக்கலாம். இவ்விதம் 3 மணிக்கொரு தடவையாகக் கொ டுக்கலாம். குடலில் சிதக் கட்டுகளும், பழைய மலங்களும் நன்கு வெளியாகி, குடலின் அழலையும் தணியும் வரை 5,6 தினங்கள் வரை இவ்விதம் சிகித்ஸிக்கவும். வயிற்றுசங்க டங்கள் யாவும் தணிந்து, அழலையும் குலைவாகத் தெரிந் தால்— குடஜாரிஷ்டம், அஹிபேனுஸவம் என்ற அபின் கலந்த திரவ மருந்து, சார்ங்கேர்யாதி வடீ இவைகளும் பின் குடூசி ஸத்வம் ச்ருங்க பஸ்மம் நவநீத பஸ்மம் வகை க்கு 2 அரிசி எடை வீதம் வெண்ணெ அல்லது நெய்யில் குழைத்தும் கொடுக்க உட்புறத்து அவயவங்களின் அழலை

யும் கடுப்பு வலியும் தணிந்து ஸுகமுண்டாகும். இந்நிலையில் நீர் ஸரிவர பிரியாவிடில் 'சிலாஜது பஸ்மம்' 5 அரிசி எடை சேர்த்து உபயோகிக்கலாம். இவ்வியாதி நிவிருத்தியாகியும் இதனுல் க்ஷீணமடைந்த சரீரத்தை புஷ்டி செய்விப்பதற்கு 'சதாவரீ க்ருதம்' 'கூஷ்மாண்ட ரஸாயனம்' 'அச்வகந்தி ரஸாயனம்' முதலிய சாந்தமான பலகாரி ஔஷதங்களை உபயோகிக்கலாம்.

1. நாட்பட்ட சீதபேதியில் பில்வக் கனி சிறந்த ஔஷதமாகவும் ஆகாரமாகவும் உபயோகப் படுகிறது. இதை கொடுக்கும் விதம்:— நன்கு கனிந்த பில்வப் பழத்தை விதை, தோல் முதலியன நீக்கி உள்ளே இருக்கும் சதை பாகத்தை மட்டுமெடுத்து வென்னீரில் நன்கு கலந்து குழப்பி கொஞ்சம் சீனு கற்கண்டு சேர்த்து உள்ளுக்குக் கொடுக்கவும். சீனு கற்கண்டு கிடைக்காவிடில் பனங்கற்கண்டு சேர்த்துக் கொள்ளலாம். ஒரு நாளைக்கு 2 தடவை விதம் மூன்று நாலு தினங்கள் உபயோகிக்கவும். பாலர்களுக்கு இதில் கால் பாகம் கொடுத்தால் போதுமானது.

2. இவ்விதமே மாதுளம்பிஞ்சை அரைத்து மேற்கூறிய விதமே கொடுப்பதும் விசேஷமானது. புளி மாதுளம்பழத்தின் சாற்றில் கொஞ்சம் சுத்தமான தேனும் கலந்து தடவைக்கு 2 அவுன்ஸ் வரை நாளைக்கு 4 தடவை உபயோகிப்பது மிகவும் கைகண்ட மருந்து. இவையாவும் அழற்சியை மாற்றி ஸ்தம்பனகாரியாக (மலத்தை இறுக்க) வேலை செய்யும். வரட்சி தாஹம் தணியும். தென்பாக இருக்கும்.

3. கபித்தாஷ்டக சூர்ணம் தாடிமாஷ்டக சூர்ணம்— இவை 10 முதல் 20 அரிசி எடை வரை தேனில் குழைத்து ஒரு நாளைக்கு 4 தடவை வீதம் கொடுக்க தீபன பாசனமாகவும் வேலை செய்யும்.

4. குடஜ பாணிதம், தாடிமாவலேஹம் இவற்றுள் ஒன்றை அரைத்தோலா எடை வீதம் நாளைக்கு மூன்று முறை வெள்ளாட்டுப் பால் அநுபானத்துடன் ஒரு பக்ஷம்

முதல் ஒரு மாதம் வரை உபயோகிக்க நீடித்த ப்ரவாஹி கை வ்யாதி நிவ்ருத்தியாகும்.

5. பாதம்பருப்பு, கசகசா இவைகளை ஜலத்தில் போட்டு ஊர வைத்து பால் விட்டரைத்து குழப்பி அடுப்பிலேற்றிக் கொதிப்பித்து இத்துடன் கற்கண்டுத்தூளையும் நெய்யையும் சேர்த்துக் கிளறி மெழுகு பதத்திலிறக்கி, நெல்லிக்காயளவு நாளைக்கு 2, 3 தடவை சாப்பிட நல்ல தென்பு ஏற்படுவதுடன் அழற்சி, வேதனை முதலியன யாவும் தணிகிறது என்பது அநேகர் உபயோகித்து அறிந்த விஷயம். இதுவும் ஔஷதகுணமும் ஆஹாரகுணமும் வாய்ந்தது.

6. மூலக் கடுப்புடன் ரக்தம் சிதம் போய்க் கொண்டிருக்கும் ப்ரவாஹிகையில் அபின் சேர்த்துத் தயாரித்த நாக பஸ்மம் 2 அரிசி எடை, சிருங்க (மான்கொம்பு) பஸ்மம் 5 அரிசி எடை நவனீத (படிக்கார) பஸ்மம் 5 அரிசி எடை வீதமாக ஒன்று கலந்து வெண்ணை அல்லது நெய்யில் குழைத்து நாளைக்கு மும்முறை வீதம் உபயோகிக்க பிரசஸ்தமான குணமளிக்கிறது.

7. வயிற்றில் உப்புஸம், வாயுவினால் இரைச்சல் இவற்றுடன் சேர்ந்திருக்கும் ப்ரவாஹிகையில் சங்க பஸ்மம் 2 அரிசி எடை சிருங்க பஸ்மம் 5 அரிசி எடை கைரிக (காவிக்கல்) பஸ்மம் 5 அரிசி எடை வீதமாகக் கலந்து தேனில் அல்லது பசுநெய்யில் குழைத்துக் கொடுக்க நல்ல பலனை அளிக்கிறது.

8. வெங்காயத்தை த்வாரம் செய்து அதனுள் அபினியைவைத்து இரண்டு சீலைமண்செய்து வெங்காயம் வெந்து கரியாகாத பக்வத்தில் புடபாக ரீதியில் பக்வம் செய்தெடுத்து நெய் சேர்த்தரைத்து விழுதை உள்ளுக்குக் கொடுக்க எவ்வித கடுமையான ஒன்றிலும், குணம் தெரியாத சிதபேதி நிற்பதுடன் மூலக்கடுப்பு வலி முதலியன வேதனைகளும் சாந்தி அடைகிறது.

9. தாடிமக்கனி (மாதுளம்பழம் புளிப்பு அல்லது

இனிப்பு)யை புடபாகரீதியில் பக்வம் செய்து தேன் கலந்து கொடுக்க விசேஷ குணமேற்படுகிறது.

10. விசேஷ துவர் ரஸ ஸத்துள்ள மங்குஸ்தான் என்று வழங்கப்படும் ஓர் விதப் பழத்தை அரைத்து மோர் கலந்தோ அல்லது தேன் கலந்தோ கொடுக்க அதிசீக்கிரம் குணமளித்து வலி கடுப்பு முதலியன நிற்கிறதென்பது ப்ரத்யக்ஷாநுபவ விஷயம். ஷை பழம் அகப்படாத போது காய்ந்த பழத்தின் மேல் ஓட்டை மோரில் அல்லது தேனில் இழைத்து உள்ளுக்குக் கொடுப்பதும் முற்கூறிய குணத்தைச் செய்யும்.

11. பாலர்களுக்குக் காணும் ப்ரவாஹிகையில் ஆரம்பத்தில் ஒரு டீ ஸ்பூன் விளக்கெண்ணெயை ஒரு அவுன்ஸ் காய்ச்சின பசும்பாலில் கலந்து இரண்டு மூன்று தினம், ஒவ்வொரு வேளை வீதம் கொடுக்கவேணும். விளக்கெண்ணெ கொடுக்க முடியாத சிசுக்களுக்கு: திராக்ஷை, கடுக்காய்த் தோல் சேர்ந்த கஷாயத்தைக் கொடுக்கலாம். இதனால் சிக்கலுள்ள தோஷாம்சங்கள் தாராளமாய் வெளி வந்துவிடும். பின்பு சிருங்கபஸ்மம், கைரிக பஸ்மம், படிக்காரபஸ்மம் வகைக்கு 2 அரிசி எடை வீதம் தேனில் குழைத்து பிரதிதினம் மூன்று வேளை கொடுத்து வரலாம். இவ்விதம் 1 வாரம் வரை சிகித்ஸித்து அதிகமாய் வெளிக்குப் போவதும் இதர வேதனைகளும் குறைந்த பின்பு சதாவரீ க்ருதம் அரை டீ ஸ்பூனளவு வெள்ளாட்டுப் பாலுடன் கலந்து காலை மாலை கொடுக்க ஸகல சேஷ உபாதிகளும் நீங்கி ஸம்பூர்ண ஆரோக்ய ஸ்திதியையும் புஷ்டியையும் அளிக்கும். அதிகக் கடுமையான ஔஷத ப்ரயோகங்கள் சிசுக்களுக்கு அவசியமில்லை.

**பொதுவாய் பெரியவர்களுக்கு** லோஹ ரஸ ஔஷதங்களில் :— நாகபஸ்மம், வங்க பஸ்மம், வெள்ளி பஸ்மம் ரஜத பர்படி, சித்ராம்பரரஸம், சந்த்ரப்ரபாவடி (ரஸம் சேர்ந்தது), நாகசுந்தரரஸம் இவைகளிலொன்றை அந்தந்த வியாதியின் நிலைமையையும் ரோகியின் பலத்தையும் பிரக்

ருத்யாதிகளையுமநுஸரித்துக் கொடுக்க நன்ருய் குணமேற் படுமென்பதில் ஐயமில்லை.

இனி இவ் வியாதியஸ்தனுக்கு பத்தியக் கிரமங்களை சுருக்கமாய்க் கூறி இக்கட்டுரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

இப் பிணியாளிக்கு அடிக்கடி யவையரிசிக் கஞ்சி, ஜவ்வரிசிக் கஞ்சி, பழைய சம்பா அரிசிக் கஞ்சி, அரோருட் என்னும் கிழங்கு மாவுக் கஞ்சி இவைகளில் பால் அல்லது மோர் சேர்த்து பக்வம் செய்து மிதமாய்க் கொடுத்து வரலாம். பின் அன்னம் ஜீர்ணிக்க சக்தி ஏற்பட்டால் மாங்கொட்டைப் பருப்பு, மிளகு, கருவேப்பிலை, சுண்ட வற்றல் இவற்றைச் சேர்த்த குழம்பை புனப்பாகம் செய்த பழைய அரிசிச் சாதத்தில் சேர்த்து நெய்யும் சேர்த்துக் கொடுக்கலாம். பின் பசுவின் தயிர் பசுவின் மோர் கலந்த அன்னம் மிதமாய்க் கொடுக்கலாம். மல்லி, சுண்டை வற்றல், மிளகு இவற்றை நெய்யில் வறுத்துப் பின் கருவேப்பிலையும் சேர்த்து தொகையலாயரைத்து அன்னத்தில் கலந்து நெய்யும் சேர்த்துப் புசிக்கலாம். வெங்காயத்தை நெய்யில் வதக்கி மிதமாய் உபயோகிப்பது நலம். மணத் தக்காளி வற்றலை நெய்யில் வறுத்து வியஞ்சனமாகக் கொள்ளலாம். ஜவ்வரிசி வடாம் மிளகாய் சேராமல் தயாரித்து நெய்யில் பொரித்துச் சேர்த்துக் கொள்ளலாம். விளாம்பழம் மாதுளம் பழம், ஆப்பிள் இக்கனிகள் இவனுக்கு உபயோகிக்கக் கூடியவைகளாகும். கொஞ்சம் பலம் வந்ததும் காய்ந்தாறிய வென்னீரில் ஸ்நானம் செய்விக்கலாம்.

அதிக நடையாட்டம், ஆயாஸகரமான வேலை செய்வது, உஷ்ணமுள்ளது அல்லது அதிகக் குளிருள்ளவிடத்தில் ஸஞ்சரிப்பது, அவ்வித இடத்தில் படுத்துறங்குவது, எளிதில் ஜீர்ணமாகக் கூடாத உணவுகள், பழையதும் குளிர்ந்ததுமான அன்னம், அவ்வித பான வகைகள், மாப்பண்டங்கள் இவைகளை அறவே விலக்க வேண்டும். ஏனெனில் இவை யாவும் இவ்வியாதியை விருத்தி செய்யக் கூடிய

அபத்ய ஆஹார விஹாரங்களாகும். தேஹப் பயிற்சி, புணர்ச்சி, அதிக நடை முதலியவற்றை வியாதி நீங்கிய பின்னும் பழைய பலம் ஏற்படும் வரை முற்றிலும் விலக்குவது நலம். ஆகவே இவ்வித பத்யாபத்ய க்ரமங்களையுமறிந்து அஹிதமானவைகளை விலக்கி ஹிதமானவைகளை உபயோகித்துத் தக்க சிகித்ஸையையும் செய்து கொள்வானேயாகில் இக்கோரமான ப்ரவாஹிகா ரோகத்திலிருந்து விடுபட்டு ஸம்பூர்ண ஆரோக்யத்தை அடைவான் என்பதில் ஸந்தேஹமில்லை.

Clinical Report :—

இவ்வூர் 8 மாதத்திய சிசு 1 மாத காலமாய் சீதபேதியால் பீடிக்கப்பட்டு எலும்பும் தோலுமாய் விட்டது. வயிறு மட்டும் வரவர உப்புஸம் அதிகமாகி வந்ததே தவிர குறைந்தபாடில்லை. இலேசான சூடும் வயிற்றில் மட்டுமிருந்தது. நாளொன்றுக்கு 7 அல்லது 8 தடவைக்குக் குறையாமல் சீதமும் ரக்தமும் சிறிது மலமும் கலந்து போய்க்கொண்டேயிருந்தது. வயிற்றிலும் ஏதோ வேதனையால் இராப்பகலும் அழுது கொண்டிருந்தது. எவ்வித இதர மருந்துகளும் சிகித்ஸையும் பயனளிக்கவில்லை. கடைசியாகத் தான் நம்மிடம் கொண்டுவரப் பட்டது. நன்றாய் பரிசோதித்துப் பார்க்கவே யக்ருத்-ப்லீகங்களும் (Liver & Spleen) பாதிக்கப் பட்டிருப்பதாகத் தெரிய வந்தது. உடன் கீழ்க்கண்ட ஔஷதங்களை மட்டும் கொடுத்து சாந்தமான சிகித்ஸை செய்யவே கிரமமாக சீதபேதியும் நின்று யக்ருத் ப்லீகக் கோளாறுகளும் ஜ்வரமும் நீங்கி ஸம்பூர்ண குணமேற்பட்டது.

கொடுக்கப் பட்ட முக்கிய ஔஷதங்களாவன :— சிருங்க (மான்கொம்பு) பஸ்மம், நாக பஸ்மம், (அபின் சேர்த்து தயாரித்த முறை) கைரிக (காவிக்கல்) பஸ்மம் இவைகள் வகைக்கு 2 அரிசி எடை வீதம் பசுநெய்யில் தினமொன்றுக்கு 3 தடவையாக இவ்விதம் 15 தினம். பின் இத்துடன் சங்கபஸ்மம் 2 அரிசி எடையும் கலந்து கொண்டு ஷி-

அநுபானத்திலேயே மற்ருெரு பக்ஷம் சிகித்ஸிக்கப்பட்டது. ஒரு மாதத்துக்குப் பின் அர்ஜுனுதி க்ருதம் (அஷ்-சிகி.) 1 டீஸ்பூனளவு காலே-மாலே பசும் பாலுடன் கலந்து ஒரு மாத காலம் கொடுக்கப் பட்டது. இதற்கு ஆஹாரம் முதலில் ஐவ்வரிசிக்கஞ்சி, அரோருட் மாவுக் கஞ்சி, பசும் பால் சிறிது சேர்த்துப் பக்வம் செய்து கொடுக்கப் பட்டது. சுத்த வெள்ளாட்டுப் பாலே நன்கு வடிகட்டி ஜலமும் கலந்து காய்ச்சி ஆறிய பின் பிரதிதினம் காலேயில் 2 அவுன்ஸ் வரை கொடுக்கப் பட்டது. மேலும் தித்திப்புள்ள நல்ல மாதுளம் பழத்தை சாறு பிழிந்து 1 அவுன்ஸ் வரை எடுத்து தேனும் அரை டீ ஸ்பூனளவு கலந்து இடையிடையே பிரதி தினம் கொடுக்கப் பட்டது.

இவ்வித பத்ய க்ரமங்கள் முதலில் ஒரு மாத காலமனுஷ்டிக்கப் பட்டது. ஒரு மாதம் சென்ற பின் ஷே ஆஹாரங்கள் போதாமலிருக்கவே, நன்ருகக் குழைய புனப்பாகம் செய்த பழைய அரிசிச் சாதத்தில் புசுவின் மோர் சேர்த்துப் பிசைந்து இரு நெல்லிக் காய் பிரமாணம் கொடுக்கப் பட்டது.

இவ்விதமே அநேக சிசுக்களும், பெரியவர்களும் ப்ரவாஹிகையினுல் பீடிக்கப்பட்டவர்கள் எம்மால் இவ்வாறு ஆயுர்வேத முறைப்படி சிகித்ஸிக்கப்பட்டு ஸம்பூர்ணகுணமடைந்திருக்கிருர்கள்.



ஸ்ரீ தந்வந்தரயே நம:

# வாசகர்களுக்கு விஜ்ஞாபனம்.

(பத்திரிகாசிரியர்.)

வைத்திய சந்திரிகை சென்ற ஜூன்மீ 8வ. 6-வது சஞ்சிகை வெளியான பிறகு, ஜூலை-ஆகஸ்டு மாதங்களில் வழக்கம்போல் வெளியிட ஸாத்தியமாகவில்லை. மதுரையில் அச்சடிக்கப்பட்டு வெளியாகிக்கொண்டிருந்த சந்திரிகையை திருச்சினுப்பள்ளியில் அச்சடித்துப் பிரசுரம் செய்யவேண்டிய ஏற்பாடுகளில் அரசாங்கத்தின் அநுமதி அடைவதில் நீண்டகால தாமதம் ஏற்பட்டுவிட்டது. அரசாங்க அநுமதி அடைந்த பின்பு தபால் இலாகா சிப்பந்திகளுடைய வேலை நிறுத்தத்தினுலும், அச்சுக்குக் காகிதம் கிடைப்பதில் ஏற்பட்ட இடையூறுகளினுலும், எல்லாவற்றுக்கும் மேலாக நமது வைத்திய சந்திரிகையை அச்சிட்டுப் பிரசுரம் செய்யும் பெரும் பொறுப்பை மேற்கொண்ட ஸ்ரீரங்கம் ஸ்ரீவிலாஸம் அச்சுக்கூடத்தாருக்குப் புதிய அச்சுக்கருவிகள் வந்து சேருவதில் ஏற்பட்ட எதிர்பாராத காலதாமதமும், கடைசியில் பிரகாசகர் ஸ்ரீ ஸுந்தரராஜய்யங்கார் அவர்களுடைய பிதா, பண்டித ஸ்ரீ மெய்யுவய்யங்கார்ஸ்வாமிகளுடைய பரமபதப்ராப்தியின் ஸம்பவமும் ஒன்றன் பின்னென்ருகத் தொடர்ச்சியாக சேரவே வைத்திய சந்திரிகை காலத்தில் வெளியாக முடியவில்லை. அநேகம் அன்பர்கள் சந்திரிகையைக் காணுத காரணத்தைக் கடிதம் மூலம் கேட்டிருந்தனர். நமது வசத்தில் இல்லாத கார்யங்களினுல் ஏற்பட்ட தாமதத்தை வாசகர்கள் அவசியம் மன்னிப்பார்கள் என்று நம்புகிருேம். சந்திரிகையின் அபிவிருத்தித்துறைகளில் பலவித முயற்சிகள் நடைபெறுகின்றன. வைத்திய ஸகோதரர்களுடைய பேராதரவால் நமது முயற்சிகள் பயனடைய வேண்டும். ஆயுர்வேதப் பிரசாரத்தைக் கருதியும், ஆயுர்வேதத்தில் உபதேசித்துள்ளபடிக்கு பொதுஜன ஸுகாதாரத்தை அநுஷ்டித்தால் அதிகப் பயன் உண்மையில் உண்டு என்பதைப் பிரத்யக்ஷத்தில் காலக்கிரமத்தில் காட்டவும் வேண்டி சந்திரிகையில் ‘ஆரோக்கிய சந்திரிகை’ என்ற தலைப்புடன் ஒரு அனுபந்தம் சேர்த்து, வரும் இதழ் முதல்

கொண்டு வெளியிட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. "स्वस्थातुर-परायणम्" "इह खल्वायुर्वेदप्रयोजनं—व्याध्युपसृष्टानां व्याधिपरिमोक्षः, स्वस्थस्य रक्षणं च" என்று சரகஸுச்ருதாசார்யர்கள் சொற்படி நாம் சந்திரிகை மூலம் நமது நாட்டில் ஸ்வஸ்தர்கள், வியாதிஸ்தர்கள் இருவகையினருக்கும் ஸ்வாஸ்தியத்தை ஸம்ரக்ஷிப்பதிலும் வியாதிகளைப் போக்குவதிலும் உபகாரம் செய்யவேண்டும். இந்த இரு லக்ஷ்யங்களைப் பூர்த்திசெய்ய எழுத்தாளர்கள் இருவகை பாஷா சைலியை உபயோகித்து உபகரிக்கப் பிரார்த்திக்கப்படுகிறார்கள். வைத்தியர்களுக்கு மட்டுமே விசேஷப் பிரயோஜனமாகிய சாஸ்திரீய தத்துவ விசாரங்களிலும் சிகித்ஸா விஷய விமர்சங்களிலும் ஆயுர்வேத பரிபாஷா பதங்களைப் பிரயோகித்து எழுதலாம். ஆரோக்கிய பரிபாலனத்தைப் பற்றிய விஷயங்களை எழுதுவதில் பரிபாஷாபதங்களை அதிகம் உபயோகிக்காமல் பொதுஜனங்கள் எல்லோருக்கும் எளிதில் விளங்கும்படியான நடைமுறை பாஷையில் எழுதவேண்டும்.

ஆரோக்கிய பரிபாலனமே ஆயுர்வேதத்தின் பரமோத்தேசம் என்பதை விளக்கி அதில் கூறிய தர்மாநுஷ்டானமே சிரேயஸ்கரம் என்றுள்ள விஷயத்தை வைத்யரத்னம் பண்டித ஸ்ரீ எம். துரைசாமி அய்யங்கார் அவர்கள் எழுதியுள்ள அழகிய வியாஸம் மேலிதழை அலங்கரிக்கப்போகிறது. அவ்வியாஸத்தில் கூறியுள்ள ஒவ்வொரு விஷயத்திற்கும் வியாக்கியான ரூபமாகக் கட்டுரைகள் மேலும் கிரமமாக வரும் பத்திரிகைகளில் வெளிவர ஸ்ரீ அய்யங்காரவர்கள் அநுக்கிரஹம் செய்வார்கள் என்று பிரார்த்திக்கிறோம்.

## விசேஷக் குறிப்புகள்.

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் விசேஷ ஸ்தாயி ஸமிதிக் கூட்டம் 18—5—46ல் கூடி, சென்னை மாகாணத்தில் ஆயுர்வேதாபிவிருத்தி முறைகளைப்பற்றி ஆலோசித்து, சர்க்காருக்கு எடுத்துரைக்க மாகாணம் முற்றிலுமிருக்கும் எல்லா வைத்திய ஸபைகளுடையவும் ஒரு விசேஷக்கூட்டம் மதராஸில் ஏற்பாடு செய்யத் தீர்மானித்தது.

அதன்படி தலைவர் ஸ்ரீ வி. பி. நடராஜ சாஸ்திரிகளுடைய பலமானப் பிரயத்தினங்களினால் 1946 ஜூன் 20, 21, 22 தேதிகளில் கவர்ன்மெண்டு இந்தியன் மெடிகல் ஸ்கூல் கட்டிடத்தில், மைலாப்பூர்

தர்மரக்ஷாமணி ஸ்ரீ கே. பாலஸுப்பிரமணிய அய்யர் அவர்களுடைய தலைமையில், சம்மேளனம் சிறப்பாக நடந்தது. தமிழ்நாடு, கேரள நாடு, ஆந்திரதேசம், கர்ணாடகதேசம் இந்த நான்கின் பிராந்திய ஆயுர்வேத மஹாமண்டலங்கள், அகாடமி ஆப் இந்தியன் மெடிஸின், எல். ஐ. எம். அஸோஸியேஷன், ஸித்த அஸோஸியேஷன், யுனானி அஸோஸியேஷன், மதராஸ்—வெங்கடரமணா ஆயுர்வேத காலேஜ், பெஜவாடா—வெங்கடேசுவர ஆயுர்வேத காலேஜ், மலபார் கோட்டக்கல் ஆர்ய வைத்ய வித்யாசாலை, குண்டூர் ராம்மோஹன் ஆயுர்வேத கலாசாலை ஆகிய இவைகள் எல்லாவற்றினுடையவும் பிரதிநிதிகளாக மொத்தம் நாற்பத்தைந்து முக்கிய கனவான்கள் ஸம்மேளனத்திற்கு விஜயம் செய்திருந்தனர். ஜுன் 20-21 இரண்டு நாட்களிலும் விசேஷ விமர்சங்கள் செய்யப்பட்டு ஒரு யாதாஸ்துக் குறிப்புத் தயாரிக்கப்பட்டது. ஜுன் 22உ தனியாக நடத்துவதாக ஏற்கனவே யோஜிக்கப்பட்டிருந்த எல். ஐ. எம். கான்பிரன்ஸு ஜுன் 22உ மேலே குறிக்கப்பட்ட ஸகல ஸபைகளுடையவும் சார்பாக ஒரு விசேஷ மஹாஸம்மேளனமாக பெஜவாடா ஸ்ரீ ஸுர்யநாராயணராவ் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. காப்டென் ஜி. ஸ்ரீநிவாஸமூர்த்தி வரவேற்புப் பிரஸங்கத்தை வெகு விஸ்தாரமாகப் படித்தார். ஆரோக்கிய இலாகா மந்திரியம்மையார் ஸ்ரீ ருக்மணீ லக்ஷ்மீபதி ஸம்மேளனத் திறப்புமொழி கூறுவதன் மூலம் தேசீய வைத்திய முறைகளுக்குத் தன்னாலியன்ற ஆதரவும் உதவியுமளிக்கும் தீர்மானத்தைத் தெரிவித்தார். மறுவாரத்தில் மேற்கூறிய ஸகல ஸபைகளுடையவும் சார்பில் ஸ்ரீ கே. பாலஸுப்பிரமணிய அய்யர், காப்டன் ஜி. ஸ்ரீநிவாஸமூர்த்தி இருவர்களும் இந்திய தேசீய வைத்திய சாஸ்திரங்களுக்கு உடனே தற்சமயம் சர்க்கார் செய்யவேண்டிய அபிவிருத்தி வழிகளை வைத்திய இலாகா மந்திரியிடம் தூதுகோஷ்டியாகச் சென்று எடுத்துரைத்தனர்.

சென்னை மாகாணத்தில் இருக்கும் பலவேறு வைத்திய ஸபைகள் பலவேறு அபிப்பிராயங்களை சர்க்காரிடம் தெரிவிப்பதைப் பார்க்கிலும் வைத்திய விஷயமாகச் செய்யவேண்டிய அபிவிருத்திப் பிரகாரங்களை வைத்தியர்களுக்குள் முதலில் ஆலோசித்து ஒரு முடிவான, ஒருமுகமான பத்ததியை கவர்ன்மெண்டாருக்குக் கொடுத்தால் அது ஆயுர்வேதாபிவிருத்தி நோக்கத்திற்கு நல்ல பயன் அளிக்கும் என்ற அந்தரங்க பாவத்துடன் தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத் தலைவர், ஸ்ரீ வி. பி. நடராஜ சாஸ்திரிகள் மேற்கூறிய சகல வைத்திய சபைகளையும் ஒரு மேடையில் கூட்டும் கார்யத்தைச் செய்துள்ளார். சென்ற 20 ஆண்டுகளாக தனித்தனியாகப் பிரிந்து நிற்கும் இந்த வைத்திய சபைகளை இரண்டுநாளில் சேர்த்துவைத்த பெருமை நடராஜ சாஸ்திரிகளுக்கு— என்று புகழப்பட்டது. இந்த ஒன்று சேர்ந்த—சபைகளுடைய சபை ஸ்திரமாக்கப் படவேண்டும். அப்

போது நமது சக்தி அதிகமாகும் என்று சிலர் அபிப்பிராயமும் கொடுத்தனர். சர்ச்சை காலத்தில் அபிப்பிராய பேதத்தை எடுத்துரைத்த போதிலும் கார்யஸித்தியைக் குறித்து சில அம்சங்களில் தன் தன் மனதுக்கு விரோதமான விஷயங்களில் விட்டுக் கொடுக்கும் மனோபாவமும் அநேகமாய் எல்லோரிடமும் நன்கு பிரகாசித்தது.

பிறகு ஆந்திரதேச வைத்தியர்கள், எல். ஐ. எம். வைத்தியர்கள், மைலாப்பூர் வெங்கட்டரமண ஆயுர்வேத வித்யாலய அதிகாரிகள் எல்லோரும் தனித்தனி ஹோதாவில் ஆரோக்கிய மந்திரியிடம் தூது கோஷ்டி சென்று தங்கள் தங்கள் மதத்தைத் தெரிவித்ததாகத் தெரிகிறது. அபிப்பிராய பேதமிருந்தாலும், பிரகாரபேதங்களிருந்தாலும் ஸ்வதேச வைத்திய முறையின் முன்னேற்ற நோக்கத்தில் ஒருமைப் பட்டவர்களே. சிறிது மதபேதமிருப்பினும் பெரிய தோஷம் ஒன்றும் விளைவதற்கில்லை. ஆனால் எல்லா சங்கங்களும் ஒருமைப்பட்டால் அந்த சக்திக்கு இணையிராதுதான்.

## ஆயுர்வேதாபிவிருத்தி

நமது மாகாணத்தில் காங்கிரஸ் அரசாட்சி ஏற்பட்டவுடன் சுகாதார இலாகா மந்திரி அம்மையார் நமது ஆயுர்வேதத்திற்கு அநேகவித முன்னேற்றங்களைச் செய்வார்கள் என்ற நம்பிக்கையுடன் ஸ்ரீமதி ருக்மணி லக்ஷ்மீபதி அவர்கட்கு நாம் நல்வரவு கூறினோம். நாம் எதிர்பார்த்தபடியே சென்ற சுமார் இரண்டு மாதங்களில் சென்னை மாகாணத்தில் ஆயுர்வேதாபிவிருத்தித் துறைகளில் வெகுவித மந்திராலோசனைகள் மந்திரி சபையில் நடந்துகொண்டிருக்கிற விஷயம் நமது வாசக நேயர்கள் தினசரிப் பத்திரிகைகளிலிருந்து அறிந்திருக்கக் கூடும்.

முதலில் 1946 ஜூன் 21௳ ஒரு ஆலோசனைக் கமிட்டி (AD-HOC COMMITTEE) கூட்டப்பட்டது. அதில் ஆயுர்வேதாபிவிருத்தி விஷயமாக ஆலோசனை சொல்ல ஒரு தனிக் கமிட்டியும் (ADVISORY-BOARD)ம் கலாசாலைகளில் பாடக்கிரமம் முதலியவைகளை நிர்ணயிக்க ஒரு தனிக் கமிட்டியும் (BOARD-OF-STUDIES) நிறுவவேண்டுமெனத் தீர்மானம் செய்யப்பட்டது. பாடக்கிரமத்தை நிர்ணயிக்கும் கமிட்டி (BOARD-OF STUDIES)க்கு மைசூர் ராஜ்யத்தில் சட்ட இலாகாவிலிருந்து விலகிய ஸ்ரீ நாராயணசாமி நாயுடு என்ற பெரியார் தலைவராக்கப்பட்டார். ஸ்ரீ நாயுடுகாருவே சென்னை மாகாணத்தில் தேசீய வைத்தியாபிவிருத்

திக்கு ஸ்பெஷல் ஆபீசர் ஆக சர்வாதிகாரத்துடன் நியமிக்கப் பட்டுள்ளார். ' ஆயுர்வேதம் ஸித்தம் யூனுனி வைத்திய முறைகளுக்கு காலேஜ்களிலும், ஸ்கூல்களிலும், நடத்தவேண்டிய பாடக்கிரமங்களை தனித்தனியாகத் தொகுத்துக்கூற மூன்று தனி உபசமிதிகளும் (SUB-COMMITTEE) இம்மூன்றுக்கும் படிக்கவேண்டிய ஆங்கில வைத்தியத்தின் பாடக்கிரமத்தைக் கூற ஒரு தனி உபசமிதியும் ஆக நான்கு உபசமிதிகள் அமைக்கப்பட்டன. இவைகள் மும்முறை கூடி ஆலோசித்துச் செய்த முடிவு என்னவெனில்—கவர்ன்மெண்டாரால் ஸ்தாபிக்கப் படப்போகும் ஆயுர்வேத காலேஜ்களில் உள்ள பிரின்ஸிபால்களும், உபாத்தியாயர்களும் சேர்ந்து சாவகாசமாய் முதலில் பாடக்கிரமங்களைத் தீர்மானம் செய்யவேண்டுமென்பதே. காலேஜில் படிக்கவேண்டிய காலம் ஐந்துவருஷங்கள். பிரதிவருஷமும் ஆயுர்வேதத்திற்கு 700 மணி நேர பாடமும், ஆங்கில வைத்தியத்திற்கு 300 மணி நேரமும் வகுத்துக் கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டது. பாடம் கற்பிக்கும் பாஷை சம்ஸ்கிருதம், தேசபாஷைகள் ஆங்கிலம் எல்லாம் சௌகர்யம்போல எடுத்துக் கொள்ளப்படும். சேரும் மாணுக்கனுக்கு சம்ஸ்கிருதத்தில் கவர்ன்மெண்டு ஓரியண்டல் என்டிரன்ஸ் பரீக்ஷையில் தேறியிருக்கும் ஞானத்துடன் ஸ்கூல்பைனல் பரிக்ஷையில் தேறியவனுக்குச் சமமான இங்கிலீஷ் பாஷா ஞானமும் இருக்கவேண்டும். இங்கிலீஷ் பள்ளிக்கூடத்தில் இன்டர்மீடியட் பரிக்ஷையில் சம்ஸ்கிருத உபபாஷையுடன் தேறிய பையனுக்கும் பிரவேச யோக்யதையுண்டு.

விசேஷ ஞானம் பெற்றிராத பழைய வைத்தியர்களுக்கு, அநேகமாய் கிராம வைத்தியர்களுக்கு, ஒருமாச காலத்திற்குத் தனிப்பயிற்சி ஞானம் வாய்ந்த வைத்தியர்களைக்கொண்டு அளிக்கச் செய்வது.

ஆங்கில வைத்தியத்தில் தேர்ச்சிபெற்ற டாக்டர்களுக்கு ஆயுர்வேதம் படிக்கவும், ஆயுர்வேதத்தில் தேர்ச்சிபெற்ற வைத்தியர்களுக்கு ஆங்கில வைத்தியம் பயிலவும் சர்க்காரிலிருந்து தகுந்தபடி பண உதவி செய்வதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

கவர்ன்மெண்டார் வெகு சீக்கிரத்திலேயே பெஜவாடா, தஞ்சாவூர், கள்ளிக்கோட்டை, மங்களூர் ஆகிய நான்கு டவுன்களில் அந்தந்த பாஷா ப்ராந்தியங்களுக்காக நான்கு ஆயுர்வேத கலாசாலைகளும், சென்னைப் பட்டணத்தில் இருக்கும் இந்தியன் மெடிகல் ஸ்கூலை உடனடியாக இந்தியன் மெடிகல் காலேஜாக உயர்த்தி விடுவதாகவும், மேலும் பல ஜில்லாக்களிலும் தாலூகாக்களிலும் தகுந்தபடி ஆரோக்கிய சாலைகளையும், ஔஷத சாலைகளையும் ஏற்படுத்தவும், மருந்து ஸ்டோர்—பார்மஸிகள் ஏற்படுத்தவும் நிச்சயம் செய்துள்ளார்கள். ஏற்படுத்தப் படும் ஆயுர்வேதக் கல்லூரிகளில் மாணவர்களுக்குள்ள

சிக்ஷா பத்ததியை விமர்சித்து முடிவு செய்யவும், மற்றும் ஆயுர்வேத சாஸ்திரங்களில் அநேக சாஸ்த்ரீய சர்ச்சைகள் செய்யவும், அநேகமாய் வரப்போகும் கல்லூரிகளில் அத்யாபகர்களாக வரக்கூடியவர்களையும், இதர ப்ரமுக வைத்யவித்வான்களையும் சேர்த்து ஒரு வைத்ய வித்வத் பரிஷத் இந்த செப்டம்பரிலேயே கூட்டும் ஏற்பாடும் நமது சர்க்காரால் செய்யப் படுவதாகத் தெரிகிறது.

பழைய காங்க்ரஸ் ராஜ்ய காலத்தில் நமது ஆயுர்வேதத்துக்குப் பிரதிகூலங்கள் அதிகமாய்க் கிளம்பின. இன்றைய காங்க்ரஸ் மந்திரிமார்கள் ஆயுர்வேதத்துக்கு அநுகூலம் செய்யும் அந்தரங்கத்துடன் இருப்பது பிரகாசமாயிருக்கிறது. ஆயுர்வேதத்துக்குப் போலியில்லாத தத்துவமான அபிவிருத்தி செய்யக் கூடிய வழிகளை அநுஷ்டிப்பதில் சர்க்கார் அவசரப்படாமல் தகுந்த ஆயுர்வேத வைத்தியர்களுடன் திர்க்காலோசனை செய்து அநுஷ்டித்தல் வேண்டும். ஆங்கில வைத்யம் பயின்றவர்களுடன் யோஜித்தலும் ஓர்வித வைத்யவாஸனையுமற்ற சட்ட நிபுணரொருவரை தேசிய வைத்தியாபிவிருத்திக்கு ஸ்பெஷலாபீஸராக நியமனம் செய்ததும் தவறாகும். நமக்கு ஆயுர்வேதாபிவிருத்தி முக்கியமானதால் சர்க்கார் நம்மைக் கேட்டாலும் கேழ்க்காவிட்டாலும், சர்க்காருடன் ஒற்றுமைக்கும் மனோபாவத்துடன் ஆயுர்வேதாபிவிருத்தி விஷயமான ஒவ்வொன்றிலும் குணதோஷங்களை எடுத்துக் காட்டி சர்க்காருக்கு உதவி புரிவதும் ஆயுர்வைதிகர்களுடைய முக்கிய கடமையாகும்.

# தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்.

(நிகில பாரத ஆயுர்வேத மஹாமண்டலத்துடன் இணைக்கப்பட்டது.)

## கட்டுரைப்போட்டிகள்—தங்கப்பதக்கங்கள்.

*1946௵ நவம்பர் மாதம் சிதம்பரத்தில் நடத்துவதாக இருக்கும் தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் 14வது சம்மேளனத்தில் முன் வருஷங்கள் போல, ஸ்திரீகளின் மாதவிடாய்க் கோளாறுகளைக் குறித்து ஸம்ஸ்கிருதத்திலும், குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டிகளைக் குறித்து தமிழிலும் எழுதப்படும் முதல்தரக் கட்டுரைகளுக்கு தனித் தனி தங்கப்பதக்கம் சன்மானமாக அளிக்கப்படும்.*

பொது விதிகள்:—ஆயுர்வேத சித்த முறைப்படி வைத்தியம் செய்யும் எல்லா வைத்தியர்களும் கட்டுரை எழுதியனுப்பலாம். மாணவர்கள் கலந்து கொள்ளக்கூடாது. 1946௵ அக்டோபர் மாதம் 30உக்குள் கட்டுரைகள் காரியதரிசிக்கு ரெஜிஸ்டர் போஸ்டுமூலம் அனுப்பப்படவேண்டும். கட்டுரையில் தன் பெயரை கட்டாயமாக எழுதக்கூடாது. பெயரையும் விலாசத்தையும் தனியாக எழுதிக் கட்டுரையுடன் அனுப்பவேண்டும்.

கட்டுரையின் அளவு FOOLSCAP காகிதத்தில் சுமார் 15, 20 பக்கங்கள் வரை எழுதப்பட்டும், சுமார் ஒன்றரைமணி நேரத்தில் படிக்கக் கூடியதாகவும் இருக்கவேண்டும். கட்டுரைகள் ஆயுர்வேத, சித்தமுறைகள்படி ஆராய்ச்சியுடன் இருக்கவேண்டும். வியாதியின் காரணம், குறி, பரிக்ஷை, சிகித்ஸை முதலியவைகளில் சாஸ்திரங்களில் கூறியவைகளுடன் நேரில் கண்டவைகளையும் விமர்சித்துக் காட்டவேண்டும். தன் அனுபவத்தில் கைகண்டதும் தென்னாட்டில் விசேஷமாக பிரசித்தி பெற்றதுமான மருந்து முறைகள் யுக்தியுடன் விளக்கத்தக்கது. சபையில் நடக்கும் சர்ச்சையில் பரிக்ஷகர்களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று கட்டுரைகள் மட்டுமே படிக்க அனுமதிக்கப்படும். கட்டுரையாளர் நேரில் வந்து தான் எழுதிய கட்டுரையில் சந்தேகங்களுக்குப் பதில் அளித்து கட்டுரையைப் படிக்கவேண்டும். நேரில் காட்டக்கூடிய பரிக்ஷா விதிகளையும், ஸ்வானுபூத ஔஷதங்களையும் காட்டிக் கொடுக்கவேண்டும். சாஸ்திர அறிவு ப்ரத்யக்ஷ அறிவு இரண்டிலும் உள்ள சாமர்த்தியத்தை கவனித்தே அவற்றுள் முதல்தரமான கட்டுரைக்குப் பரிசு அளிக்கப்படும். பரிசு பெற்ற கட்டுரையை அச்சிட மண்டலத்திற்கேதான் உரிமை.

ஸ்திரீகளின் மாதவிடாய் கோளாறுகளைக் (ஆர்தவதோஷம்) குறித்த கட்டுரை ஸம்ஸ்கிருத பாஷையில் தேவநாகரி எழுத்தில் இருக்கவேண்டும். ஹேது, லிங்கம், ஔஷதம், உபத்ரவம் முதலியவைகள் நன்கு நிரூபிக்கப்படவேண்டும்.

குழந்தைகளின் ஈரல், குலைக்கட்டிகளைக் குறித்த கட்டுரை தமிழ்பாஷையில் நன்கு எழுதப்படவேண்டும். முன்காலத்திய கட்டி, தற்காலத்திய கட்டி, இவைகளுக்குப் பேதம் உண்டா? எத்தனை நிலைமைகளாக வியாதியைப் பிரிக்கமுடியும்? என்ன ஆகாராதிகளிலிருந்து வியாதி அதிகம் உண்டாகிறது? தற்காலத்தில் அதிகம் ஏற்பட்டிருக்கிறதா? அப்படி ஏற்பட்டிருந்தால் முக்கிய காரணம் ஏதாயிருக்கலாம்? முதலிய விஷயங்களை, சுருதி, யுக்தி, அனுபவம் இம் மூன்றையும் ஒட்டி விவரிக்கப்படவேண்டும். மற்ற விவரங்களுக்கு காரியதரிசிக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

தயவு செய்து இதைத் தங்கள் நண்பர்களுக்கும் தெரியப்படுத்தவும்.

பண்டிட் ராமசர்மா,
காரியதர்சி, தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்,
கரூர், S. I. R.

Printed and Published by Dr. S. M. Sundararajacharya
at the Sri Vilasam Press, Srirangam.